**மார்ச் – 20**

# TNPSC துளிகள்

- அசாம் தேயிலைத் தோட்டங்களில் பிராகோனிடே குடும்பத்தைச் சேர்ந்த சிலோனஸ் (காரினிசிலோனஸ்) மகாதேப் என்ற புதிய ஒட்டுண்ணி குளவி இனம் கண்டறியப் பட்டு உள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தில் சுமார் 189 ஆண்டுகளுக்குப் பிறகு ஹென்கெலியா மோனோ ஃபில்லா என்ற அரிய வகைத் தாவரம் மீண்டும் கண்டறியப்பட்டுள்ளது, இது கெஸ்னேரியாசி குடும்பத்தைச் சேர்ந்தது; இது முதன்முதலில் 1836 ஆம் ஆண்டு சேகரிக்கப் பட்டது.
- திருச்சூர் மாவட்டத்தில் உள்ள பேச்சி-வாழானி வனவிலங்கு சரணாலயத்தில் டிராவிடா பேரினத்தையும் மோனிலிகாஸ்ட்ரிடே குடும்பத்தையும் சேர்ந்த டிராவிடா வாழானியா என்ற புதிய மண்புழு இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- 1,143 கி.மீ நீளத்திற்கும் அதிகமான செயல்பாட்டு மெட்ரோ பாதைகளுடன் இந்தியாவின் மெட்ரோ ரயில் வலையமைப்பு உலகின் மூன்றாவது பெரிய வலை அமைப்பாக மாறியுள்ளது.
  - 2014-ல் 5 நகரங்களில் வெறும் 248 கி.மீ. ஆக இருந்த மெட்ரோ வலை அமைப்பு தற்போது 29 நகரங்களுக்கு விரிவடைந்துள்ள நிலையில் இந்த விரைவான வளர்ச்சியானது, இந்தியாவை சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்த இடத்தில் வைக்கிறது
- 2026 ஆம் ஆண்டிற்கான தேசியப் பாரா தடகள சாம்பியன்ஷிப், மார்ச் 19 முதல் 21 ஆம் தேதி வரை ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் நடைபெறும்.
- பழங்குடியின கலாச்சாரம் மற்றும் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காக புது டெல்லியில் 2026 ஆம் ஆண்டிற்கான பாரத் டிரைப்ஸ் ஃபெஸ்ட் தொடங்கப்பட்டது.
- பிரேசில், 16 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடக அணுகலை ஒழுங்கு படுத்துவதற்காக புதிய சட்டத்தை அமல்படுத்தியுள்ளது.
- தூக்கமின்மை மற்றும் தூக்கத்தில் மூச்சுத்திணறல் போன்ற தூக்கக் கோளாறுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உலகத் தூக்க தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் சமபகல்/உத்தராயணத்திற்கு முந்தைய வெள்ளிக்கிழமையன்று (மார்ச் 13/2026) அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Sleep Well, Live Better" என்பதாகும் .
- இணையவழி மற்றும் நேரடிச் சந்தைகளில் நுகர்வோர் விழிப்புணர்வை மேம்படுத்தவும் உரிமைகளைப் பாதுகாக்கவும், 2026-ஆம் ஆண்டின் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் மார்ச் 15 அன்று அனுசரிக்கப்பட்டது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Safe Products, Confident Consumers" என்பதாகும்.

# தேசியச் செய்திகள்

## தத்தெடுக்கும் தாய்மார்களுக்கான மகப்பேறு விடுப்பு


- தத்தெடுக்கும் தாய்மார்களுக்கான மகப்பேறு விடுப்பில் விதிக்கப்பட்டிருந்த வயது வரம்பை இந்திய உச்ச நீதிமன்றம் அரசியலமைப்புக்கு எதிரானது என ரத்து செய்து உள்ளது.
- சமூகப் பாதுகாப்புக் குறியீடு, 2020 இன் பிரிவு 60(4), அரசியலமைப்பின் 14 மற்றும் 21

ஆகிய சரத்துகளின் கீழ் சமத்துவம் மற்றும் வாழ்வுரிமையை மீறுவதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- தத்தெடுக்கப்படும் குழந்தையின் வயதைப் பொருட்படுத்தாமல் தத்தெடுக்கும் தாய்மார்களுக்கு 12 வார மகப்பேறு விடுப்பு வழங்கப்பட்டுள்ளது.
- இதற்கு முந்தைய விதியானது, மூன்று மாதங்களுக்குட்பட்ட குழந்தைகளைத் தத்தெடுப்பவர்களுக்கு மட்டுமே சலுகைகளை வழங்கிய நிலையில் அது நடைமுறைக்கு மாறானது மற்றும் பாரபட்சமானது என நீதிமன்றம் கூறியது.
- சமூகப் பாதுகாப்புச் சலுகைகளின் ஒரு பகுதியாக தந்தைவழி விடுப்பையும் பரிசீலிக்குமாறு நீதிமன்றம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.





## எம்.சி. மேத்தா Vs இந்திய ஒன்றியம் வழக்கு




- டெல்லி-NCR பகுதியில் காற்று மாசுபாடு தொடர்பான 40 ஆண்டுகள் பழமையான எம்.சி. மேத்தா Vs இந்திய ஒன்றியம் வழக்கை இந்திய உச்ச நீதிமன்றம் முடித்து வைத்தது.

- 1985 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் ஆர்வலர் எம்.சி. மேத்தாவால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு சுற்றுச்சூழல் சட்டத்தில் ஒரு மைல்கல் பொதுநல வழக்காக அமைந்தது.
- இந்த வழக்கை அடுத்து, டெல்லி போக்குவரத்தில் CNG பயன்பாடு மற்றும் கடுமையான மாசுக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் போன்ற முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- தற்போதைய சிக்கல்களை இன்னும் திறம்பட கையாளுவதற்காக, நீதிமன்றம் இப்போது "தேசிய தலைநகர் பிராந்தியத்தில் (NCR) காற்று மாசுபாடு தொடர்பான பிரச்சனைகள்" என்ற தலைப்பில் தானாக முன்வந்து ஒரு வழக்கைத் தொடங்கி உள்ளது.
- சிறந்த வழக்கு மேலாண்மைக்காக, நிலுவையில் உள்ள விண்ணப்பங்களைத் தனித் தனி நீதிப் பேராணை மனுக்களாக மாற்றவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.
- இந்த நடவடிக்கை, தேசிய தலைநகரப் பிராந்தியத்தில் நிலவும் காற்று மாசுபாடு தொடர்பான சிக்கல்களை விரைவாகவும், அதிக கவனத்துடனும் கையாளுவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தோட்டக்கலை பயிர் மதிப்பீடுகள் 2024-26




- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் 2024-25 ஆம் ஆண்டிற்கான இறுதி மதிப்பீடுகளையும், 2025-26 ஆம் ஆண்டிற்கான முதல் முன்கூட்டிய மதிப்பீடுகளையும் வெளியிட்டுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில் மொத்தத் தோட்டக்கலை பயிர்ப் பரப்பளவு 301.36 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது மற்றும் உற்பத்தி 3707.38 லட்சம் டன்களை எட்டி உள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி 3708.46 லட்சம் டன்களாக இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில் பழங்களின் உற்பத்தி 1176.49 லட்சம் டன்களாகவும், காய் கறிகளின் உற்பத்தி 2177.97 லட்சம் டன்களாகவும் உயர்ந்துள்ளது.
- வாழை, மாம்பழம், வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் தக்காளி போன்ற பழங்கள் மற்றும் காய்கறிகளில் முதன்மை உற்பத்தி உயர்வு காணப்பட்டது.
- மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் மதிப்புச் சங்கிலிகள் காரணமாக நறுமணப் பொருட்கள், மலர்கள் மற்றும் மருத்துவத் தாவரங்களும் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

## தென்னை மேம்பாட்டுத் திட்டம் 2026

- தென்னை உற்பத்தி மற்றும் விவசாயிகள் வருமானத்தை அதிகரிக்க 2026-27 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் தென்னை மேம்பாட்டுத் திட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது.
- உலகளாவிய தென்னை உற்பத்தியில் சுமார் 30.37% பங்களிப்பதன் மூலம் இந்தியா உலகின் மிகப்பெரிய தென்னை உற்பத்தியாளராக உள்ளது.
- சுமார் 2165 ஆயிரம் ஹெக்டேரில் தென்னை பயிரிடப்படுகிறது மற்றும் ஆண்டு தோறும் சுமார் 21,373 மில்லியன் தேங்காய்களை உற்பத்தி செய்கிறது.
- சுமார் 10 மில்லியன் விவசாயிகள் உட்பட கிட்டத்தட்ட 30 மில்லியன் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக தென்னை சாகுபடியைச் சார்ந்துள்ளனர்.
- இத்திட்டம் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், பழைய மரங்களை மாற்றுதல் மற்றும் தென்னை, முந்திரி மற்றும் கோகோ போன்ற அதிக மதிப்புள்ள விவசாயப் பயிர்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துகிறது.




## தீர்க்கவதி கிருஷக் புஞ்சி சாகர் யோஜனா





- கூட்டுறவுச் சங்கங்களுக்கான நீண்டகாலக் கடனை வலுப்படுத்துவதற்காக, கூட்டுறவு அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தால் (NCDC) இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளுக்கு நீண்டகால நிதி உதவியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இதன் மூலம் மூலதன உருவாக்கம் மற்றும் கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டை ஊக்குவிக்கிறது.
- நிலையான நிறுவன கடன் ஓட்டத்தை உறுதி செய்வதற்கும் உற்பத்தித்திறனை

மேம்படுத்துவதற்கும் சிறந்த நிதிச் செயல்பாட்டைக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்களை இது இலக்காகக் கொண்டுள்ளது.

- தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் சரியான பாதுகாப்பு மற்றும் உரிய ஆய்வு நெறிமுறைகளுடன் மதிப்பீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் கடன் அனுமதித்தல் போன்றவற்றை மேற்கொள்கிறது.
- மீட்பு வழிமுறைகளில், SARFAESI (நிதிச் சொத்துகளின் பிணையமாக்கல் மற்றும் மறு சீரமைப்பு மற்றும் பிணைய நலன்களைச் செயல்படுத்துதல்) சட்டம், 2002 இன் கீழ் உள்ள சட்ட விதிகள் மற்றும் கடன் மீட்புத் தீர்ப்பாய (DRT) நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும்.

## ஜன் விஸ்வாஸ் திருத்த மசோதா 2025




- விரிவான பரிந்துரைகள் மற்றும் மேம்பாடுகளைச் சேர்ப்பதற்காக, தேர்வுக் குழுவின் ஆய்வுக்குப் பிறகு ஜன் விஸ்வாஸ் (திருத்த) மசோதா, 2025-ஐ அரசாங்கம் மக்களவையிலிருந்து திரும்பப் பெற்றது.
- சிறைத்தண்டனை விதிகளுக்குப் பதிலாக பண அபராதங்களை விதிப்பதன் மூலம் பல்வேறு சட்டங்களின் கீழான சிறிய குற்றங்களை குற்றமற்றதாக மாற்றுவதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நீதிமன்றங்களின் சுமையைக் குறைக்கவும், வழக்குகளைக் குறைக்கவும் மற்றும் இந்தியாவில் தொழில் புரிவதை எளிதாக்கவும் முயல்கிறது.
- மசோதாவைத் திரும்பப் பெறுவது என்பது ஒரு நடைமுறை நடவடிக்கையாகும் என்பதோடு இது அரசாங்கத்தை மசோதாவைத் திருத்தவும், மெருகேற்றவும் மற்றும் வலுவான விதிகளுடன் மீண்டும் அறிமுகப்படுத்தவும் அனுமதிக்கிறது.
- இந்த நடவடிக்கை நம்பிக்கை அடிப்படையிலான நிர்வாகம், ஒழுங்குமுறை எளிமைப்படுத்தல் மற்றும் இணக்கமான சூழலை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கிய மாற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## ஆசியா - ஆப்பிரிக்கா விவசாயக் கூட்டணி




- ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா இடையே வர்த்தகம், விவசாய ஒத்துழைப்பு, முதலீடு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றத்தை அதிகரிக்க ஆசியா ஆப்பிரிக்கா விவசாயக் கூட்டணி நிறுவப்பட்டுள்ளது.
- கூட்டாண்மை மற்றும் கொள்கைச் சீரமைப்புக்கான கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக, நிறுவனங்கள் சட்டம், பிரிவு 8-ன் கீழ் ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமாக இது அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தக் கூட்டணி விவசாய-உணவு மதிப்புச் சங்கிலிகளை மேம்படுத்துவதிலும், இரு பிராந்தியங்களுக்கு இடையே அறிவு மற்றும் தொழில்நுட்பப் பகிர்வை ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்துகிறது.
- உலகளாவிய விவசாய உற்பத்தியில் ஆசியாவும் ஆப்பிரிக்காவும் இணைந்து 40 சதவீதத்திற்கும் அதிகமாகப் பங்களிக்கின்றன.
- இரு பிராந்தியங்களுக்கும் இடையிலான இருதரப்பு விவசாய வர்த்தகம் ஆண்டு தோறும் 90 பில்லியன் அமெரிக்க டாலர்களைத் தாண்டுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆஸ்திரேலியாவில் கோலா கரடிகளின் எண்ணிக்கை உயர்வு


- ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் கோலா கரடிகளின் எண்ணிக்கை கணிசமாக மீண்டுள்ள நிலையில் இது அவற்றின் மரபணுப் பன்மையை மேம்படுத்தியுள்ளது.
- முன்னதாக, அதிகப்படியான வேட்டையாடுதல் மற்றும் வாழ்விட இழப்பு காரணமாக இவற்றின் எண்ணிக்கை சரிந்து, மரபணு ரீதியான சிக்கல்கள் ஏற்பட்டன.

- சமீபத்தியத் தசாப்தங்களில் ஏற்பட்ட விரைவான எண்ணிக்கை வளர்ச்சி, மரபணு மாற்றத்தை அதிகரித்து, நெருங்கிய உறவுகளுக்குள் இனப்பெருக்கம் செய்யும் முறையால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துள்ளது.
- இது கோலா கரடிகளின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், உடல் குறைபாடுகளைக் குறைக்கவும் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளவும் உதவியுள்ளது.
- கோலா கரடிகளின் என்பவை யூக்கலிப்டஸ் இலைகளை உணவாகக் கொள்ளும் மற்றும் காடுகளைச் சார்ந்து வாழும் ஒரு வகை பையுடைய பாலூட்டிகள் ஆகும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## குப்பை கிடங்கு மீத்தேன் உமிழ்வைக் குறைத்தல்



- "Reducing Methane Emissions from Landfills: The potential of biocover systems" என்ற ஒரு அறிக்கையை Climate and Clean Air Coalition என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.
- உயிரியல் உறை அமைப்புகள் குப்பைக் கிடங்குகளிலிருந்து வெளியேறும் மீத்தேன் உமிழ்வைத் திறம்பட குறைப்பதோடு, காற்றின் தரம் மற்றும் பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் என்று இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.
- உயிரியல் உறைகள்/மூடகம் என்பது இயற்கையாகத் தோன்றும் பாக்டீரியாக்களைப் பயன்படுத்தி மீத்தேனை குறைந்த தீங்கு விளைவிக்கும் கார்பன் டை ஆக்சைடு மற்றும் நீராக மாற்றும் ஒரு நுண்ணுயிர் அமைப்பாகும்.
- இவை நீண்ட காலத்திற்கு 50 சதவீதம் வரையிலான மீத்தேன் உமிழ்வைக் குறைக்க உதவும் என்பதோடு இது கழிவு மேலாண்மைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
- உலகளாவிய மனிதனால் உருவாக்கப்படும் மீத்தேன் உமிழ்வில் குப்பை கிடங்குகள் சுமார் 11 சதவீதப் பங்களிப்பை வழங்குகின்றன.

## பயன்படுத்தப்படாத மருந்துகள் குறித்த UNEP அறிக்கை 2026




- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) "பயன்படுத்தப்படாத மருந்துகளைப் பாதுகாப்பாக அகற்றுதல்" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கை மனிதன், விலங்கு மற்றும் சுற்றுச்சூழல் நல அமைப்புகளை ஒருங்கிணைக்கும் 'ஒரே ஆரோக்கியம்' அணுகுமுறையைப் பரிந்துரைக்கிறது.
- மருந்துகளை முறையாக அகற்றாதது நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் (AMR), சுற்றுச் சூழல் நச்சுத்தன்மை மற்றும் நாளமில்லாச் சுரப்பி பாதிப்புகளுக்கு வழி வகுக்கிறது.
- உலகளவில் சுமார் 50% மருந்துகள் கழிவுகளாக மாறுகின்றன, மேலும் பயன்படுத்தப் படாத மருந்துகள் அபாயகரமான சுகாதாரக் கழிவுகளில் சுமார் 3% ஆகும்.
- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பெரும்பாலும் மருந்து மாசுபாடுகளை முழுமையாக அகற்றுவதில் பயனற்றவையாக உள்ளன.
- உயர் வெப்பநிலை எரிப்பு, கழிவுகளை நிலைப் படுத்துதல், பொறியியல் குப்பைக் கிடங்குகள் மற்றும் இணை செயலாக்கம் போன்றவை பரிந்துரைக்கப்பட்ட முறைகள் ஆகும்.

# மாநிலச் செய்திகள்

## சமயச் சுதந்திர மசோதா 2026

- கட்டாய மதமாற்றத்தைத் தடுப்பதற்காக மகாராஷ்டிரா மத சுதந்திர மசோதா 2026-ஐ அம்மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதா மதமாற்றங்களை ஒழுங்குபடுத்துவதையும், கட்டாயம், மோசடி அல்லது தூண்டுதல் இன்றித் தானாக முன்வந்து மதமாற்றம் நடப்பதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சட்டவிரோத மதமாற்ற நடவடிக்கைகளுக்கு 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் உள்ளிட்ட கடுமையான தண்டனைகளை இது வழங்குகிறது.
- சிறார்கள், பெண்கள், பட்டியலினத்தவர் (SC) மற்றும் பழங்குடியினரை (ST) உள்ளடக்கிய வழக்குகளில் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய கூடுதல் அபராதங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.
- இந்தச் சட்டம் என்பது திருமணம் மூலமான மதமாற்றங்கள் மற்றும் கூட்டு மத மாற்றங்களையும் உள்ளடக்கி, வெளிப்படைத்தன்மை மற்றும் சட்டப் பொறுப்புக் கூறலை உறுதி செய்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★